CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩක්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்
No. 6 1/B, Layards Road, Colombo 05. **Tel:** +94112584047 / +94114503001
**Fax:** +94112584047 **E-mail:** cmev@cpalanka.org **Web:** www.cmev.org

*திகதி: பெப்ரவரி 14, 2023, கொழும்பு.*

## *2023* ம் ஆண்டின் உள்ளூராட்சி தேர்தல் மீதான இடையூறுகள் தொடர்பான ஊடக அறிக்கை

*2023* ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலுக்கான தபால்மூல வாக்கெடுப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறித்து CMEV விசேட கவனம் செலுத்துகிறது. அச்சிடப்பட்ட தபால்மூல வாக்குச்சீட்டுகளை உரிய வேளையில் தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கு அரச அச்சகம் மறுப்பு தெரிவித்தமையே இதற்கு காரணம் என அறியக்கூடியதாக உள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவானது வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கான மொத்த தொகையையும் செலுத்தும்வரை வாக்குச்சீட்டுகளை அச்சிடும் செயன்முறையை தொடர இயலாது என அரச அச்சகத்தினால் நேற்றைய தினம் பெப்ரவரி 13, 2023 தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக CMEV இற்கு அறியக் கிடைத்தது. கடனடிப்படையில் சேவைகளை பெற்றுக் கொள்ள வேண்டாம் என ஜனவரி 31, 2023 அன்று அரச நிறுவன தலைவர்களுக்கு ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதலுக்கு அமைய இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 9 அன்று நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி தேர்தலை நடாத்துவதில்இ தபால் மூல வாக்கெடுப்பிற்கு ஏற்பட்டுள்ள இவ்விடையூறு தாக்கம் செலுத்தும் என CMEV நம்புகிறது. அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகள் வாக்காளர்கள் மத்தியில் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்துவதுடன் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தினால் உறுதி செய்யப்பட்டுள்ள அனைத்து குடிமக்களின் வாக்களிக்கும் உரிமையை நேரடியாக மீறுவதாக இது அமைகின்றது. அதேவேளை அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைவாக உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவது நிறைவேற்றுத் துறையின் பொறுப்பாகும் என CMEV முன்னிலைப்படுத்துகின்றது.

தேர்தலை நடாத்துவதற்குரிய அனைத்து சட்டங்களையும் அமுல்படுத்துவதற்கு, அனைத்து அரச நிறுவனங்களும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரசியலமைப்புச் சட்டத்தின் 104B(2)ம் பிரிவில் கூறப்பட்டுள்ளதை மீறுவதாகவே அரச அச்சகத்தின் இச்செயற்பாடானது அமைந்துள்ளது. இக்கடமைகளை செய்ய மறுத்தல் அல்லது தவறுதல் அரசியலமைப்புச் சட்டத்தின் 104GGம் பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். குறித்த பிரிவின் கீழ் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி அரச அச்சகம் மற்றும் தேர்தல் செயன்முறைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வேறு எந்த பொது/அரச நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவினை CMEV குறிப்பாக வலியுறுத்தி நிற்கின்றது.

***கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து***
*இணை-அழைப்பாளர்*

***திரு. உதய களுப்பத்திரண***
*இணை-அழைப்பாளர்*

***திரு. லசந்த டி சில்வா***
*இணை-அழைப்பாளர்*